கட்டுரை

ஜோ டி குரூஸ்
rnjoedcruz@gmail.com

# சத்தமில்லாமல் ஒரு சமூகப் புரட்சி...



நிகழ்வில் கலந்து கொண்டபோது...

**க**டந்த ஜூன் 30 ஆம்தேதி சனிக்கிழமை வாழ்வில் இப்படி ஒரு உவகையூட்டும் அற்புத மான நாளாக அமையப் போகிறது என்று எனக்குத் தெரிந்திருக்கவில்லை. ஏன் நிகழ்ச்சி யின் ஏற்பாட்டாளர்களுக்குமே, அது தங்கள் அர்ப்பணிப்பான கடந்த கால முயற்சிகளின் பலனாய் இருந்தாலும்கூட ஒருவிதத்தில் வியப்பையே அளித்திருக்கக் கூடும்.

ஜூன் மத்தியில் ஆசிரியர் முத்தையா அழைத்திருந்தார். காக்கையில் எழுதி ஒரு வருடத்துக்கும் மேலாகி விட்டதே, திரும்பவும் எழுதுவது குறித்து கேட்பாரோ என்ற மனநிலை யிலேயே அலைபேசியை எடுத்தேன். அஸ்தினா புரம் நாவலை வாசித்த எழுத்தாளர் அமரந்த்தா உங்களைச் சந்திக்க விரும்புகிறார், அழைத்து வரலாமா என்று கேட்டார். 'நமக்குத்தான் நமது படைப்பைப் பற்றி யாராவது பேசமாட்டார் களா' என்ற இயல்பான எதிர்பார்ப்பு இருக் கிறதே! உடனே சரி என்றேன். இருவரும் அலுவலகத்தில் என்னைச் சந்தித்தார்கள். நாவல் குறித்துப் பேசினார் அமரந்த்தா. கடற்கரை மக்கள் மொழியில் சொல்வதானால், கிழித்து உப்பு வைக்காத குறைதான். மனித வாழ்வைப் பதிவு செய்பவர்கள், இதுபோன்ற கறாரான விமர்சனங்களை எதிர்கொண்டே ஆகவேண்டும். இன்றைய நிலையில் இது மிக அத்தியாவசிய மான தேவையும்கூட. என்னைப் பொறுத்தவரை யில், காலம் வாழ்வைப் பதிவு செய்வதற்கான இன்னொரு சந்தர்ப்பத்தை அளிக்குமா என்பது தெரியாது. ஒருவேளை அப்படி ஒரு வாய்ப்பு கிடைத்து பதிவு செய்தால், இதுபோன்ற ஆரோக்கியமான விமர்சனங்கள் மிகவும் பய னுள்ளவையாய் இருக்கும் என்றே நம்புகிறேன்.

தொடர்ந்த உரையாடலில், தோழர் அமரந்த்தா ஜூன் 30 இல் கல்பாக்கமருகே பள்ளி ஆசிரியர்கள் பங்கேற்பில் நடக்க விருக்கும் ரிவார்ட் அறக்கட்டளையின் நிகழ்வு குறித்தும், அந்த நிகழ்வில் பங்கேற்பதற்கான

வாய்ப்பு இருக்குமா எனவும் கேட்டார். மறுக்க முடியவில்லை. காரணம், நிகழ்வின் முக்கியத் துவமும், சுகதேவ் போன்ற மனதிற்கினிய நண்பர்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பும். தமிழக வாசகப் பரப்பில், இதுபோன்ற நிகழ்வுகள் அரிதானது என்பதை நிகழ்வின் நிரலே கட்டியம் கூறி வரவேற்றது.

ரிவார்ட் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் சென்னையிலிருந்து தொடங்கிய எங்கள் பயணம், கல்பாக்கம் கடந்து கடுமையான கிராமச் சாலைகளின் வழியே அலுக்கல், குலுங்க லோடு சுமார் மூன்று மணி நேரத்தில் முடிவுக்கு வந்தது. பயணத்தின் தன்மையைச் சொல்வதற் கான காரணம், இந்த கடினமான சாலைகளில் பயணித்துத்தான் அறக்கட்டளையின் தன்னார்வ நிர்வாகிகளும், பணியாற்றும் ஆசிரியர்களும் தங்களால் பயன்பெறும் மாணவ, மாணவிகளை தினமும் சந்திக்கிறார்கள்.

இந்திரமயமாகிப் போன இந்த வாழ்க்கை யில், நான் எனது என்ற சராசரி வாழ்க்கை முறையிலிருந்து வேறுபட்டு அடித்தள மக்கள் வாழ்வை, அவர்களது தலைமுறைகளின் கனவு களை நனவாக்க அக்கறையோடு பணியாற்றும் ரிவார்ட் அறக்கட்டளையின் நிறுவனச் செயல்பாட்டாளர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கணவன், மனைவி, குழந்தை கள் என குடும்பமாய்ச் செயல்படுகிறார்கள். இது என்னைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய முன்னுதாரணம். நடப்பதை கண் முன்னால் கண்ட பின்பு சாதாரணமாய்க் கடந்து போக மனம் இடம் தரமறுக்கிறது.

சென்னையிலிருந்து கிளம்பிய எங்கள் குழுவிற்கு, கல்பாக்கம் அணுமின் நிலைய குடியிருப்பிலிருந்த விஞ்ஞானி திரு. ஸ்ரீதர் அவர்களது வீட்டில் காலைச் சிற்றுண்டி. வீட்டிற்குள் நுழைந்த பிறகுதான் இது ஒரு அசாதாரணமான இடமென்று புரிந்தது. வேலைக்குச் சேர்ந்து குடும்ப வாழ்க்கை ஆரம்பித்த காலந் தொட்டே, கணவனும் மனைவியுமாய் வசதியில்லாத கிராமத்துக் குழந்தைகளைத் தேடித் தத்தெடுத்துப் படிக்க வைத்துச் சுயமாய் அவர்கள் வாழமுடியும் என்ற நிலைவரை அத்தனை தேவைகளையும் ஒரே குடும்பமாய் பூர்த்தி செய்து அனுப்புகிறார்கள். தொடர்ந்து திக்கற்று எதிர்காலம் கேள்விக்குறி யாய் இருந்த கிராமத்துக் குழந்தைகள், இன்று நிலைமாறி, வழக்கறிஞராய், விஞ்ஞானியாய், மருத்துவராய், தொழில்நுட்ப வல்லுநராய் பூத்துக் குலுங்கி மகிழ்வதைக் கண்ணாரக் கண்டபோது கண்கள் கசிந்துருகியது. பாலைவனத்தில் ஆடுகளை மேய்த்துத் திரிந்த மோயீசனுக்கு பசுமை மாறாமல் எரிந்த ஒரு முட்செடியின் உள்ளிருந்து இறைவனின் குரல் கேட்டதாம், ''மோயீசா, உன் பாதரட்சை களைக் கழற்றிவிடு. நீ நிற்கும் இடம் புனித மானது'' அசரீரியாய் என் காதுகளிலும் கேட்டது. எழுந்து என் காலணிகளை வெளியே வாசல் பக்கம் கழற்றி வைத்துவிட்டு திரும்பவும் உள்ளே வந்தேன்.

நண்பர்களான, விஞ்ஞானி திரு. நடராஜன், அவரது துணைவியார் எழுத்தாளர் அமரந்த்தா, திருமதி.ஆனந்தி பாஸ்கரன், முனைவர்.சத்திய நாராயணா, முனைவர். செங்கதிர், விஞ்ஞானி திருமதி. கலாவதி, திரு.மங்கல ராஜன்பாபு போன்றோரோடு விஞ்ஞானிகளான ஸ்ரீதர் தம்பதியினர் தொடங் கிய அடுத்தகட்ட முயற்சிதான் வசதிவாய்ப்பற்ற கிராமப்புற குழந்தைகளுக்கான தரமான கல்விச் சூழலை முன்னெடுக்கும் ரிவார்ட் அறக் கட்டளை. கிராமப்புற அரசுப் பள்ளிகளில், அந்தந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் பெற்றோர் ஆசிரியர் அமைப்பின் ஒப்புதலோடு, தங்களிடமிருந்து தரமான பயிற்சி பெற்ற ஆசிரியர்களைப் பணியில் அமர்த்து கிறார்கள். பணியிலமர்த்தப்பட்ட ஆசிரியர்கள் நிர்வாக அடிப்படையில் அந்தந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியரின் கீழ் வந்தாலும், அவர் களுக்கான ஊக்கத் தொகை, தகுதி மேம்பாட்டுப் பயிற்சி, தொடர் கண்காணிப்பு போன்றவற்றை ரிவார்ட் அறக்கட்டளையே அக்கறையோடு செய்கிறது. கல்பாக்கத்தைச் சுற்றியுள்ள 30 கி.மீ பரப்பளவில் இருக்கும் கிராமப்புறக் குழந்தை களின் திறன் மேம்பாடு என்ற இலக்கோடு 2005இல் ஒரு பள்ளியில் 4 ஆசிரியர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சேவை, இன்று 41 பள்ளிகளில் 67 ஆசிரியர்களோடு தொடர்கிறது.

எனது வியப்பு இதோடு நின்றுவிட வில்லை. காலை பத்து மணியளவில், நான் அழைக்கப்பட்டிருந்த நிகழ்வு தொடங்கியது. பங்கேற்க வந்திருந்த ஆசிரியர்கள் என்னைக் கைகாட்டி ஏதேதோ பேசுகிறார்கள். காரணம், வேறொன்றுமில்லை அது ஒரு இலக்கியத் திறனாய்வு நிகழ்வு. 1960 க்குப் பிறகு பிறந்த, பத்து தமிழ்ப் படைப்பாளிகளைத் தேர்வு செய்து அவர்களின் இலக்கியப் பங்களிப்பு சார்ந்து விமர்சனம் செய்கிறார்கள். இமையம், அழகிய பெரியவன், கண்மணி குணசேகரன், யூமா வாசுகி, எஸ்.ராமகிருஷ்ணன், பெருமாள் முருகன், விநாயக முருகன், சு.வேணுகோபால், ஜெயமோகன், ஜோ டி குருஸ். இவர்களில், நான் மட்டுமே அவர்களோடு தளத்திலிருக்கிறேன், மற்ற எழுத்தாளர்கள் யாரும் இல்லை. ஒருவித

**வேலைக்குச் சேர்ந்து குடும்ப வாழ்க்கை ஆரம்பித்த காலந்தொட்டே, கணவனும் மனைவியுமாய் வசதியில்லாத கிராமத்துக் குழந்தைகளைத் தேடித் தத்தெடுத்துப் படிக்க வைத்துச் சுயமாய் அவர்கள் வாழமுடியும் என்ற நிலைவரை அத்தனை தேவைகளையும் ஒரே குடும்பமாய் பூர்த்தி செய்து அனுப்புகிறார்கள்.**

மான பதட்டத்தோடேயே அமர்ந்திருந்தேன்.

பெரும்பாலான ஆசிரியர்கள் முதல் வாசகர்கள். ஆனால் அவர்களே முதல்தரமான வாசகர்கள் என்பது போகப் போக அவர்களது துடிப்பான பங்களிப்பில் தெரிந்தது. காய்தல், உவத்தல் அகற்றி ஒருபொருட்கண் ஆய்தல் என்பார்களே அதுபோல ஒவ்வொரு படைப்பாளி சார்ந்தும், தனித் தனிக்குழுவாய் வந்து படைப்புகளை அவர்கள் விமர்சனம் செய்ததை சம்பந்தப்பட்ட படைப்பாளிகள் கேட்டிருக்க வேண்டும். எங்கேயோ யாரோ சொன்னது போலில்லை, நாங்களே வாழ்ந்து பெற்ற அனுபவம் போலிருந்தது என்றார்கள். இதுதான் யதார்த்தமான நவீன இலக்கியத்தின் பங்களிப்பு. தாங்கள், படைப்பிலிருந்து முரண் படும், உடன்படும் தருணங்களை வெள்ளேந்தி யாய் அவர்கள் சொன்னாலும், எங்கள் ஆசிரியர், எங்கள் ஆசிரியர் என ஒவ்வொரு குழுவும் தனது குழுவுக்கான படைப்பாளியை உரிமை கொண்டாடியது, உண்மையிலேயே மனதை மயிலிறகால் வருடியது போலிருந்தது. பங்கேற்ற குழுக்களில் தலைமைதான் என்றில்லை, அனைத்துக் குழு உறுப்பினர் களுமே படித்துவிட்டுத்தான் வந்திருந்தார்கள், தங்கள் எதிர்வாதத்தையும், புரிதலையும் தயங்கா மல் எடுத்துரைத்தார்கள் என்பது இன்றைய நிலையில் பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. கற்பனையை ஊற்றெடுத்துப் பெருகச் செய்யும் இந்த இலக்கியத் தாகம், இப் பள்ளியாசிரியர் களின் மூலம் இன்றைய இளம் தலைமுறையைக் கண்டிப்பாய்ச் சென்றடையும் என்பது என் போன்றோரின் நம்பிக்கை.

வெள்ளைக்காரன் காலத்தில் அனை வருக்கும் கல்வி என்றாகி அதுவே வெறும் ஏட்டுச் சுரைக்காயாய் நின்றுபோன கொடுமை யை நாம் இன்றும் அனுபவிக்கிறோம். கல்வி என்ற பெயரில், நாட்டின் ஒட்டு மொத்த இளைஞர் பட்டாளமும் ஏவிய பணி செய்யும் ஊழியர் மனநிலைக்குத்தான் தள்ளப் பட்டிருக் கிறதே அல்லாமல் விவாதம் செய்து, புரிதல் ஏற்பட்டு, புதிய உத்திகளை அவர்களாகவே கண்டடையும் உன்னத நிலைக்கு அல்ல.

சமீபத்தில் சிங்கப்பூர் சென்றிருந்த போது நண்பரொருவர் நகைச்சுவையாய்ச் சொன்னார், "இங்குள்ள கட்டடங்களைப் பார்த்து மலைத்துப் போகிறீர்கள். இந்தக் கட்டடங்களைக் கட்டி முடிப்பதற்கான செலவும் அதற்கான தொழில் நுட்பத்திற்கான செலவும் சமம். இந்த உத்தியை, தொழில்நுட்பத்தைத் தந்தது அமெரிக்கா. அவர்கள் புதிது புதிதாய் உத்திகளை உருவாக்கப் படிக்கிறார்கள். நாமோ உழைப் பதற்காகப் படிக்கிறோம். நம்மிடம் இருப்பது பயிற்சி, அவர்களிடமோ புரிதல். இரண்டுக்கும் பெரிய வித்தியாசம்''.

இலக்கிய வாசிப்பு வாழ்வைப் புரிந்து கொள்ள வைக்கும். சக உயிரை மதிக்கக் கற்றுத் தரும். வருங்காலத் தேவைகளைக் கனவுகளாய்க் கொண்டுவந்து காட்டும். மொழித் தெரிதல், அறிவிடம் கொண்டு சேர்க்காது. ஆனால், புரிதலின் மூலம் ஏற்படும் தர்க்கமும், அது தூண்டும் கற்பனையும், அந்தக் கணத்தில் ஏற்படும் உள்ளுணர்வும் புதிய உத்தியை உருவாக்கும். இந்த உத்திதான் இன்றைய பொருளீட்டும் சக்தி.

கனவு காண்பது இலக்கியம், அது கற்பனையைத் தூண்டுகிறது. கற்பனைதான் அறிவியலின் ஆசான், அதன் அடுத்த கட்டம் தொழில்நுட்பம். இந்தத் தொழில்நுட்பம் கைவரப்பெற்ற மேலை நாட்டோர் மேன்மை யாய் வாழ்கிறார்கள். காரணம், அவர்களது தொடர் இலக்கிய வாசிப்பு. தொடக்க கல்வியி லிருந்தே இலக்கிய வாசிப்பை ஊக்குவிக்கிறது மேலைநாட்டு அரசுகள். இங்கோ பணியி லிருக்கும் நமது இலக்கியப் பேராசிரியர் களிடமும் இலக்கிய வாசிப்பு இல்லை. விளைவு கற்பனை வறட்சி. படைப்பூக்கம் இல்லாத தலைமுறை. அடுத்த பத்து ஆண்டுகளில் திறன்சார் வேலைகளைச் செய்யவும் இயந்திரங் கள் வந்துவிடுமாம். அந்த நிலையில், இன்று நம்மவர்கள் புளகாங்கிதமாய்ப் பணி செய்யும் மென்பொருள் நிறுவனங்களும் இருக்காது. ஆக, இலக்கிய வாசிப்பு என்பது வாழ்விற்கான அத்தியாவசியத் தேவை என்பதை இப்போ தாவது புரிந்து கொள்வோமா!

ரிவார்ட் அறக்கட்டளை அக்கறையோடு தொடங்கிய இம் முயற்சியின் மூலம், இன்று பள்ளி ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட இந்தப் புரிதல், இயக்கமாய்த் தொடர வேண்டும். ●